அமெரிக்காவில்
தமிழர்களின் கிறடிட் காட்
மோசடி – 03

சிறுவர் குரல்
சிறுவர்களின் ஆங்கங்களை
தாங்கிவரும் பகுதி – 05

காரை மக்களைத்
தலைகுனிய வைக்கும்
காரை நலன்புரிச் சங்கம்

வெளிவிவகார அமைச்சுச்
செயலாளர் கோகன்னவுடன்
நேர்காணல் – 07










மாதம் ஒரு முறை வெளிவரும் இலவச இதழ், ஒக்ரோபர் 2007 - நவம்பர் 2007, குரல் 19

Voice of London Tamils

# லண்டன் குரல்

## தேசம் சஞ்சிகை ஏற்பாட்டில் பொதுக்கூட்டமும் கலந்துரையாடலும்

# இலங்கை: மனிதஉரிமை மீறல்களை எதிர்கொள்ளல்



மக்கள் கண்ணாணிப்புக் குழுத் (Civil Monitoring Committee) தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய (இலங்கை) சிறப்புப் பேச்சாளராக கலந்து கொள்கிறார்.

Human Rights Watch பிரதிநிதி சாரு கொக், மற்றும் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் உரையாற்ற உள்ளனர்.

மனித உரிமை மறீல்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கையில் மனித உரிமைகளை மீறுபவர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்குடன் சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி இப்பொதுக் கூட்டமும் கலந்துரையாடலும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

காலம் : 15 டிசம்பர் 2008 சனிக்கிழமை
நேரம் : மாலை 1:30 மணி - மாலை 5:30 மணி
இடம் : Quackers House
Bush Rd
Leytonstone
London E11 3AU

தொடர்பு: த ஜெயபாலன்: 07800 596 786 கொன்ஸ்ரன்ரைன்: 0208 905 0452 சேனன்: 07944 868 889

**சர்வதேச நாடுகள் இலங்கைக்கான இராணுவ பொருளாதார உதவிகளை நிறுத்த வேண்டும் !**
**தமிழர்கள் அனைத்து வளங்களையும் ஒன்றுதிரட்டி போராட்டத்திற்கு தர வேண்டும் !!**

# யுத்தம் தொடரும்!
# தொடர்ந்து போராடுவோம்!!

## மாவீரர் தின உரை 2007



இவ்வருட மாவீரர் தின உரையும் வன்னியில் இடம்பெற்ற விமானத் தாக்குதல்களும் அதனைத் தொடர்ந்து கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளும் இலங்கையில் சமாதானம் அருகில் இல்லை என்பதை தெளிவாக உறுதிப்படுத்தி உள்ளது. ஏற்கனவே மிக மோசமான வாழ்நிலையை எதிர் நோக்கி உள்ள இலங்கைத் தமிழ் குறிப்பாக வடக்கு கிழக்குத் தமிழ் மக்களுக்கு இது அதிர்ச்சியை அழிக்காவிட்டாலும் நம்பிக்கையை ஏற்படத்தி இருக்கவில்லை.

சர்வதேசச் சமூகம், அரசுக்கு இராணுவப் பொருளாதார உதவிகள் வழங்குவதை அடியோடு நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ள புலிகளின் தலைவர் வே பிரபாகரன் தமிழ் மக்கள் குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் அனைத்து வளங்களையும் ஒன்று திரட்டி எமது விடுதலைப் போராட்டத்துக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு உள்ளார். அவர் தனது உரையின் இறுதியில் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம் எனத் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 6ம் பக்கத்தில்)

## ரிபிசி - சேது வழக்கு



ரிபிசி தொடர்பான வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட நடராஜா சேதுருபனது தண்டனையை ஹரோ கிறவுன்கோட் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தும் படி பணித்துள்ளது. 2007 மார்ச் 29 ல் தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக சேதுருபன் தொடுத்த மேன் முறையீட்டை விசாரித்த நீதிபதி தண்டனையை மீள்பரிசீலனை செய்யுமாறு பணித்துள்ளார். மேன்முறையீடு நவம்பரில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மீள்பரிசீலனைக்கு உத்தரவிடப்பட்டது.

## மஹாலட்சுமி ஆலய விவகாரம் மற்றுமொரு கூட்டம்

ஈஸ்ற்ஹாம் மஹாலட்சுமி ஆலய விவகாரம் மெஹா சீரியலாகத் தொடர்கிறது. இவ்வாலய விவகாரம் தொடர்பாக அவ்வாலயத்தின் சமயச் செயலாளராக இருந்து பதவி நீக்கப்பட்ட ரி ஜெகநாதன் டிசம்பர் 8ல் பொதுக்கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார். தான் பதவி நீக்கப்பட்டது தொடர்பாக அவர் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தெரிவித்து உள்ளார்.

## இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வும் வழிமுறைகளும்
### Seminar and Discussion


8th December 2007 Saturday 3.30pm
London Muslim Centre, (4th Floor, Seminar suite)
82-92 Whitechapel Road , Whitechapal, E1 1JX
(Nearest Tube Station: Whitechapall & Aldgate East)

உண்மைகள் உறங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீது நெருக்குவாரங்கள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (T.R.O) விடுதலைப் புலிகளுக்குத் தேவையான நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது உறுதி செய்யப்பட்டதனாலே அதன் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் பிளேக் (படம்) நவம்பர் 16ல் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.




அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 1997ல் அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது. பின்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமெரிக்காவில் செயற்பட்டது. இதன் நடவடிக்கைகளை 2006ம் ஆண்டில் இருந்து கண்காணித்து வந்த நேரத்தில் கைது செய்யப்பட்ட சில விடுதலைப் புலி உறுப்பினர்களின் வாக்குமூலத்தின் படி விடுதலைப் புலிகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிதியுதவி வழங்கி வருவது உறுதிப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படைக்கு படகுகள் மற்றும் உபகரணங்களை அமெரிக்க அரசு அன்பளிப்பாக வழங்கி இருப்பதாகத் தெரிவித்த பிளேக் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு உட்பிரவேசிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

புலிகளையும் புனர்வாழ்வுக் கழகத்தையும் இலங்கையிலும் தடைசெய்ய வேண்டும் என இலங்கைப் பாராளுமன்றத்தில் விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்திருந்தார். ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய நிதி சேகரித்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை அமெரிக்கா தடைசெய்தது போல் இலங்கை அரசும் தடைசெய்ய வெண்டும் என விமல் வீரவன்ச நவம்பர் 16ல் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

பயங்கரவாத செயல்களில் நேரடியாக ஈடுபட்டுவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை தடை செய்வதற்கு இலங்கை அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகம வீரவன்சவிற்குப் பதிலளித்து இருந்தார்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டுவதில் ஈடுபட்டதாகத் தெரிவித்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை அமெரிக்கா தடை செய்தமைக்கு அமைச்சர் போகல்லாகம நாடாளுமன்றத்தில் நன்றி தெரிவித்தார்.



அமெரிக்க அரசின் இக்குற்றச்சாட்டை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நவம்பர் 18ல் வெளியிட்ட செய்திக் குறிப்பில் முற்றாக மறுத்து உள்ளது.

குரல் 20, டிசம்பர் 07

லண்டன் குரல்


ஆசிரியர்: த ஜெயபாலன்
ஆசிரியர்குழு: Dr பி சிவக்குமார், ஆர் சுரேஸ்குமார், ஜோ ஜெயவேந்தன்
நிர்வாகம்: ரி கொன்ஸ்ரன்ரைன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK

செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 020 8905 0452

'லண்டன் குரல்' பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'லண்டன் குரல்' பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

# சாந்தன் பிணையில் விடுவிக்கப்பட்டார்



நவம்பர் 22ல் சாந்தன் என அறியப்பட்ட பிரித்தானிய தமிழ் கூட்டமைப்பின் (British Tamil Association - BTA) பொறுப்பாளர் அருணாச்சலம் கிருசாந்தகுமார் பிணையில் விடுவிக்கப்பட்டு உள்ளதாக பிபிசி செய்தி வெளியிட்டு உள்ளது. கிங்ஸ்ரன் கிறவுன் கோட்டே சாந்தனுக்கு பிணை வழங்கி உள்ளது. யூன் 27ல் சாந்தன் மற்றும் தமிழ் இளையோர் அமைப்பு (Tamil Youth Organisation - TYO) பொறுப்பாளர் கோல்டன் லம்பாட் ஆகிய இருவர் மீதும் பொலிசார் குற்றச்சாட்டுகளை பதிவு செய்திருந்தனர்.

2006, யூலை 25ல் ஹைட் பார்க்கில் வி.புலிகளுக்கு சார்பான கூட்டத்தை ஒழுங்குபடுத்த உதவியது, அதில் கலந்து கொண்டு வி.புலிகளுக்கு சார்பாக உரையாற்றியது, ஆயுத தளபாடங்கள் பற்றிய ஆவணங்களை வி.புலிகளுக்கு வழங்கும் நோக்குடன் வைத்திருந்தது, லண்டனில் ஒருவரிடம் வி.புலிகளுக்கு வழங்கும் நோக்குடன் £1500 பவுணைப் பெற்றுக் கொண்டது, இதன் மூலம் குறிப்பிட்ட காலம் (23 ஜனவரி 2005 முதல் 22 யூன் 2007 வரை) தடைசெய்யப்பட்ட வி.புலிகள் அமைப்புக்காகச் செயற்பட்டது என்ற 5 குற்றச்சாட்டுகள் சாந்தன் மீது பதிவு செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு யூலை 25ல் இடம்பெற்ற கூட்டத்தை நடத்த உதவியது என்று கோல்டன் லம்பாட் மீது ஒரே குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இவ்விருவரும் யூன் 21ல் கைது செய்யப்பட்டனர். யூன் 27ல் இவர்கள் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டது. சாந்தன் மீது பின்னர் மேலதிக குற்றச்சாட்டுகளும் பதிவானதாக இவர்களுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனை எம்மால் உறுதிப்படுத்த முடியவில்லை.

## லண்டன் மாவீரர் நிகழ்வு

நவம்பர் 27ல் லண்டனில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுகளில் 20,000க்கும் மேற்பட்டவர்கள் கலந்த கொண்டனர். லண்டனில் உள்ள பிரமாண்டமான எக்செல் மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மண்டபம் நிறைந்து வந்தது மக்கள் தம்முயிரைத் தியாகம் செய்த மாவீரர்களுக்கு அஞ்சலி செய்தனர். இம்மாவீரர் தின நிகழ்வுகள் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் வாழும் ஏனைய நாடுகளிலும் இடம்பெற்றது.

# தீக்கிரையாகும் ஊடகச் சுதந்திரம்



எரிக்கப்பட்ட சண்டே லீடர் அலுவலகம்

நவம்பர் 21 அதிகாலை கொழும்பில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருந்த சண்டே லீடர் பத்திரிகை அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டு உள்ளது. அண்மையில் இலங்கை அரசாங்கத்தினதும் பாதுகாப்புப் படையினரதும் சட்ட விரோத நடவடிக்கைகளை சண்டே லீடர் அம்பலப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்திற்கும் கருணாவிற்குமான தொடர்புகள், கருணாவை இலங்கையில் இருந்து வெளியேற்றத் திட்டம் தீட்டியது எனப் பல விடயங்களை சண்டே லீடர் அம்பலமாக்கி இருந்தது.

இலங்கை பாதுகாப்புப் படைகளின் உதவியுடன் தமிழ் ஆயுதக்குழு ஒன்றே இத்தீவைப்புச் சம்பவத்தில் ஈடுபட்டதாக பரவலாக சந்தேகிக்கப்படுகிறது.

இதே தினம் பிரான்ஸில் இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில் தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் துக்ளக் சஞ்சிகையை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் சிலர் தீக்கிரையாக்கினர். பிரான்ஸில் உள்ள தமிழ் கடைகளுக்கு வந்த துக்ளக் சஞ்சிகையின் நவம்பர் 21, பிரதிகளே விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

தமிழ்செல்வனின் மரணம் குறித்து விடுதலைப் புலிகளுக்கு விரோதமான கருத்துக்களுடன் துக்ளக் வெளிவந்தமையாலேயே இத்தீக்கிரையாக்கும் சம்பவம் இடம்பெற்று உள்ளது.



துக்ளக் ஆசிரியர் சோ தனது நிலைப்பாட்டை அண்மையில் மாற்றிக் கொண்டவர் அல்ல. சோ விடுதலைப் புலிகளுக்கு மட்டுமல்ல ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டையே உடையவர். இது அனைவரும் அறிந்த விடயம். துக்ளக்கை எரித்தவர்களுக்கு இது இப்போது தான் தெரிந்திருக்கிறது



என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத லாச்சப்பல் வர்த்தகர் ஒருவர்.

கடந்த சில மாதங்களுக்கு முன் பிரான்ஸில் தினமுரசு பத்திரிகை விற்பனை செய்வதற்கும் தடைவிதிக்கப்பட்டு இருந்தது. தற்போது தடைவிதிக்கப்பட்ட பட்டியலில் துக்ளக்கும் சேர்த்தக் கொள்ளப்பட்டு உள்ளது.

இவை இரு வேறுபட்ட சம்பவங்களாக இருந்தபோதும் சம்பந்தப்பட்டவர்களின் சிந்தனை ஒரேமாதிரியானது என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத ஊடகவியலாளர் ஒருவர்.

அண்மைக்காலமாக இலங்கை அரசு திட்டமிட்ட வகையில் தனக்கு எதிரான ஊடகங்களை குறி வைத்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமை சிபிஜே போன்ற உரிமை அமைப்புகளின் மிகுந்த கண்டணத்திற்கு உள்ளாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

CPJ
COMMITTEE TO PROTECT JOURNALISTS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானிய கிறடிட் காட்களில் இருந்து அமெரிக்காவில் $250,000 களவாட முற்பட்ட எழுவருக்கு பிணை மறுப்பு!!! குழுத் தலைவருக்கு $2 மில்லியன் பிணை!

**பிரித்தானியாவில் உள்ள 200க்கும் மேற்பட்ட பெற்றோல் நிலையங்களில் இருந்து களவாடப்பட்ட ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் கிறடிட்காட் தகவல்களைப் பயன்படுத்தி அமெரிக்க வங்கிகளில் இருந்து $ 250,000 அபேஸ் பண்ண முயன்ற எண்மரில் எழுவருக்கு அமெரிக்க நீதிமன்றம் பிணை மறுத்துள்ளது. அதன் குழுத் தலைவருக்கு $ 2 மில்லியன் பிணை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்காவில் கிறடிட் காட் மோசடியில் ஈடுபட்ட தமிழருக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருப்பதாக மன்ஹட்டன் அரச சட்டத்தரணி, Assistant District Attorney Kim Han தெரிவிக்கிறார்.

தடுத்து வைக்கப்பட்டு உள்ள எண்மரில் அறுவர் Chelsea Inn, ஹொட்டலில் இவ்வாண்டு ஜனவரியில் நடந்த முற்றுகையில் கைது செய்யப்பட்டனர். மற்றைய இருவரும் யூலையில் கைது செய்யப்பட்டனர். இவர்களில் Newark பகுதியைச் சேர்ந்த சிவபாலசிறி வேலாயுதபிள்ளை (31) கைது செய்யப்படும் வரை Newark Airportல் security agent & baggage handler என மூன்று வேலைகளைச் செய்து வந்துள்ளார். இவரே மற்றைய எழுவருக்கும் தலைவராக இருந்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டு உள்ளது.

2001ல் அரசியல் தஞ்சம் கோரிய வேலாயுதபிள்ளையின் தஞ்சக் கோரிக்கை இன்னமும் District Attorney Robert Morgenthauஇன் கீழ் விசாரணையில் உள்ளதாகவும் அரச சட்டத்தரணி Kim Han தெரிவிக்கிறார்.

குற்றம்சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் பிரித்தானியாவில் உள்ள 200க்கும் மேற்பட்ட பெற்றோல் நிலையங்கள் ஊடாக ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் credit card numberகளையும் PINகளையும் கடந்த ஆண்டு களவாடி திட்டமிட்ட உலக மோடிக் குழுக்களூடாக மோசடியில் ஈடுபட்டதாகக் அரச தரப்பு சட்டத்தரணி Assistant District Attorney Kim Han, தெரிவித்தார்.



சந்தேக நபர்: இப்ராகிம்

சந்தேக நபர்: கிறிஸ்சாந்தா ராசநாயகம்

அண்மையில் வேலாயுதபிள்ளைக்கு பிணை வழங்குவது தொடர் பான வழக்கில் அரச தரப்பு சட்டத்தரணி Kim Han வாதிடுகையில் சந்தேக நபர், கிரிமினல்களுக்கு ஹொட்டல்களைப் பதிவு செய்து, காரை வாடகைக்கு எடுத்து அவர்களை வெவ்வேறு வங்கிகளுக்கு அழைத்துச் சென்று பணத்தை வெளி நாடுகளுக்கு அனுப்புவருடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்ததாகத் தெரிவித்தார்.

அரசதரப்பு சட்டவாதி Kim Han தொடர்ந்தும் வாதிடுகையில் வேலாயுதபிள்ளை கைது செய்யப்பட்ட போது அவரிடம் 30 மோசடியான கிறடிட் காட்கள் இருந்ததாகவும் அவர் வாடகைக்கு எடுத்த காரில் 400 காட்கள் இருந்ததாகவும் தெரிவித்தார்.

இவற்றின் இலக்கங் களும் இரகசிய இலக்கங் களும் பிரித்தானியாவில் உள்ள இரு பெற்றோல் நிலையங்களில் இருந்து எடுக்கப்பட்டதாகவே உள்ளதாவும் Kim Han தெரிவித்தார்.

Chelsea Inn இல் இடம்பெற்ற அறுவருடைய கைது எதிர்பாராமலேயே இடம் பெற்றது. நியூயோர்க் பொலிஸ் டிப்பாட்மெண்ட் NYPD புலனாய்வு அதிகாரிகள் வேறு சம்பவம் தொடர்பாக Chelsea Inn இற்குச் சென்றனர். அப்போது ஒரு அதிகாரி "Freeze! I will shoot you if you move!", எனச் சத்தமிட Ibrahim Abdifatah, 27 என்பவரிடமிருந்து 67 வங்கி அட்டைகள் வீழ்ந்தது.

சந்தேகப்பட்ட பொலிசார் அவரை விசாரித்த போது அவை playing cards என Ibrahim Abdifatah பதிலளித்து உள்ளார்.

Ibrahim Abdifatah ம் இன்னும் நால்வரும் இருந்த அறையைச் சோதனையிட்ட போது 250 வெற்று அடைடைகளும், ஒரு coding machineம், வங்கிக் கணக்குகள் பற்றிய தகவல்க ளும், ஒரு laptopம் அங்கிருந்து எடுக்கப்பட்டது.

500 காட்களை திருடிய குற்றத்தை Ibrahim Abdifatah ஏற்றுக் கொண்டார். தன்னை இங்கிலாத்தில் வைத்து இக்குழுவினர் சேர்த்துக் கொண்டதாவும் இக்காட்களை பயன்படுத்துவதற்கு $5,000 உறுதியளிக்கப்பட்டதாகவும் அவர் பொலிசாரிற்கு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அமெரிக்காவில் extra microchip security device இல்லாததால் இவர்கள் அமெரிக்காவை தங்கள் திட்டத்திற்கு பயன்படுத்தியதாக வும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட மற்று மொருவரான கிறிஸ்சாந்தா ராசநாயகன் (19), உஸ்மான் மொகமட் என்பவரை அடையாளம் காட்டி உள்ளார். அவரே இவர்களுக்காக பிரித்தானி யாவில் ஏற்பாடுகளைச் செய்து உள்ளார்.

ராசநாயகனின் தகவல் படி இக்குழு $250,000 களவாடத் திட்டமிட்டு இருந்து உள்ளனர். வேலாயுதபிள்ளையைத் தவிர மற்றைய அனைவருக்கும் பெயில் மறுக்கப்பட்டு உள்ளது. அவருக்கு $ 2 மில்லியன் பிணை நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இம்மோசடிக்குழு விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் கள் என அரச தரப்பு சட்டத்தரணி Kim Han தெரிவிக்கிறார். Jane's Intelligence Review சஞ்சிகையை ஆதாரம் காட்டி கிறடிட் காட் மோசடி விடுதலைப் புலிகளின் ஒரு யுக்தி என அவர் தன் வாதத்தில் தெரிவித்து உள்ளார். மேலும் பிரித்தானிய, இலங்கை அதிகாரிகள் இதில் விடுதலைப் புலிகளின் பின்னணி இருப்பதாகத் தெரிவிப்பதையும் அரச தரப்பு சட்டத்தரணி Kim Han சுட்டிக்காட் உள்ளார்.

இக்குற்றச்சாட்டை சந்தேக நபர்களைப் பிரதிநிதித்துவப்படுத் தும் சட்டத்தரணிகள் மறுத்து உள்ளனர்.

### ஒருவர் திருப்பி அனுப்பப்பட்டார் இருவர் தடுப்பு முகாமில்

## சங்கரா சுப்பர் ஸ்ரோர் மீது ஹரோ கவுன்சில் நடவடிக்கை

சவுத் ஹரோவில் உள்ள சங்கரா சுப்பர்ஸ்ரோரில் இளம் வயதினருக்கு மதுபானம் விற்பனை செய்ததை அடுத்து பெரும் சிக்கலில் மாட்டி உள்ளது. ஹரோ கவுன்சிலின் மூவர் கொண்ட குழு சங்கராவின் மதுபானம் விற்பதற்கான அனுமதிப்பத்திரத்தை செப்ரம்பர் இறுதிப்பகுதியில் ரத்து செய்து உள்ளது.

யூன் 9, யூலை 7 ஆகிய இரு தினங்களில் சங்கராவில் இளம் வயதினருக்கு மது விற்கப்பட்டு உள்ளது.




யூன் 24 அன்று பொலிசாரும் குடிவரவு அதிகாரிகளும் சங்கரா சுப்பர்ஸ்ரோரை சோதனையிட்டதில் குடிவரவுப் பத்திரங்கள் இன்றி அங்கு வேலை செய்த நால்வர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் வேலை செய்யும் விதியை மீறிய திருப்பி அனுப்பப்பட்டு உள்ளார். அவர் மணித்தியாலத்திற்கு 2 பவுண்களுக்கு வேலை செய்துவந்ததாக பொலிஸ் Sgt Carl Davis தெரிவித்தார்.

இவரே ஹரோவின் மதுபான அனுமதி வழங்கும் அலுவலர் ஆவர். அவர் சங்கராவின் மதுபான அனுமதியை மீளாய்வு செய்யும்படி ஹரோ கவுன்சிலை கேட்டதையடுத்து சங்கராவின் மதுபான அனுமதி ரத்து செய்யப்பட்டது.

யூன் 24ல் பொலிசாரால் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பின் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டார். மற்றைய இருவரும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டனர்.

சங்கராவின் உரிமையாளர் துசியந்தன் அழகரட்ணம் தமது மதுபான ஆனுமதி ரத்து செய்யப்பட்டதையடுத்து தனது விசனத்தை வெளிப்படுத்தி உள்ளார். தங்கள் தரப்பு வாதத்தை மன்றம் செவிமடுக்க வில்லை என்றும் தாங்கள் பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுவதாகவும் மூன்றாவது சந்தர்ப்பத்தை கவுன்சில் தந்திருக்க வேண்டும் என்றும் துசியந்தன் அழகரட்ணம் தெரிவித்து உள்ளார். இவர் இத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய உள்ளதாகவும் தெரியவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பாராளுமன்ற ஆசனங்கள்

இலங்கைப் பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தின் மூன்றாவதும் இறுதியுமான வாக்கெடுப்பு டிசம்பர் 14 இடம்பெற உள்ளது.

தற்போதைய அரசின் ஆட்சி தொடருமா இல்லையா என்பதை இந்த வாக்கெடுப்பு நிர்ணயிக்கும். இதற்கு முன் இடம்பெற்ற இரு வாக்கெடுப்பகளிலும் தற்போதைய அரசு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருந்தது. டிசம்பர் 14 தற்போதைய அரசின் நாட்குறிப்பில் முக்கிய நாளாக உள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சி அதிகாரத்தை சிறுபான்மையினக் கட்சிகளே தாங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைப் பாராளுமன்றத் தின் தற்போதைய ஆசன நிலை: பாராளுமன்றத்தில் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை 225. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் 196. தேசிய பட்டியல் மூலம் 29. சபாநாயகருக்கான பொது ஆசனம் 1.

அரசாங்க சார்பான ஆசனங்கள்:

66 பொதுசன ஐக்கிய முன்னணி

23 ஐதேக ல் இருந்து இணைந்தவர்கள்

10 ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ்

08 ஜாதிக கெல உறுமய

08 இலங்னை தொழிலாளர் காங்கிரஸ்

02 மலையக மக்கள் முன்னணி

117 மொத்த ஆசனங்கள்

எதிர்தரப்பு ஆசனங்கள்:

44 ஐக்கிய தேசியக் கட்சி

38 ஜனத்தா விமுக்தி பேரமுன ஜே.வி.பி

22 தமிழ் தேசியக் கூட்டமைப்பு

02 சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு

01 ஜாதிக கெல உறுமய

107 மொத்த ஆசனங்கள்

# இலங்கையில் ௨௨௨ பாலங்களைக் கட்ட பிரித்தானியா கடன்

நாடளாவிய ரீதியில் 222 பாலங்களை புனர்நிர்மாணம் செய்யவும் கொழும்பில் இரு மேம்பாலங்களை அமைக்கவுமான பாரிய அபிவிருத்தித் திட்டத்திற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைக்கு 50 மில்லியன் பவுண் நிதியை கடனாக வாங்கி உள்ளது. இக்கடன் தொகையை பிரித்தானிய அரசாங்கம் எச். எஸ்.பி.சி வங்கியினூடாக வழங்குவதுடன் இதற்கான ஒப்பந்தம் நவம்பர் 16ம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அலரி மாளிகையில் கைச்சாத்திடப்பட்டது.

இவ்வொப்பந்த கைச்சாத்தில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதி திட்டமிடல் அமைச்சின் பதில் செயலாளர் சுமிக் அபேசிங்கவும் பிரித்தானிய எச்.எஸ்.பி.சி வங்கியின் சார்பில் இலங்கையில் உள்ள ஹொங்கொங் என்ட் சங்காய் வங்கி பிரதம நிறைவேற்றதிகாரி டேவிட் க்ரிபிட்ஸ்சும் கைச்சாத்திட்டு உள்ளனர்.

தற்போது இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளில் ஈரானும் பிரித்தானியாவும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் முக்கிய இடம் வகிக்கின்றன. ஈரான் அபிவிருத்தித் திட்டத்திற்கு வழங்கிய 1.5 பில்லியன் டொலரில் 500 மில்லியன் கடன்அடைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு உள்ளது.

# கட்சி மாறிய ராஜபக்ஷ வைத்துள்ள குற்றச்சாட்டுகள்

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பின ரும் பொதுமுயற்சி நிறுவனங்கள் தொடர் பாக விசாரணை செய்யும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் (கோப் அமைப்பு) தலைவருமான விஜயதாச ராஜபக்ஷ நவம்பர் 14ம் திகதி நாடாளுமன்றத்தில் எதிர்தரப்பு ஆசனத்தில் அமர்ந்தார். இதையடுத்து அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது அரசு நாடாளுமன்றத் தில் நிறைவேற்ற வேண்டும் என்று 7 கோரிக்கைகளை முன்வைத்தார். அவையாவன

1. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோப் அறிக்கையில் ஊழல் மோசடி என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள அமைச்சர்கள் 2 பேர் உடனடியாக அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட வேண்டும். இவர்களுக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை நடத்த வேண்டும் என்பதையும் தெரிவுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

2. இதனூடாக குற்றம் சாட்டப்பட்டு உள்ள திறைசேரி செயலாளர் வருமானவரித் திணைக்கள ஆணையாளர் ஆகியோரும் பதவி நீக்கப்பட வேண்டும்.

3. அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகவும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகவும் குறைக்கப்படல் வேண்டும்.

4. 2007ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 1987 கோடி ரூபா செலவு செய்யப்பட்ட விதம் பற்றிய கணக்கறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இதே போல் 2008 இற்கு ஒதுக்கப்பட்டுள்ள 5067 கோடி ரூபாவை செலவு செய்ய உத்தேசித்துள்ள செயல்திட்டம் பற்றியும் நாடாளுமன்றத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

5. சுமார் 19 லட்சம் சமுர்த்தி பெறுநர்க்காக ஒதுக்கப்பட்டுள்ள 960 கோடி ரூபா 3,000 கோடி ரூபாவாக அதிகரிக்கப்படல் வேண்டும்.

ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி 500 கோடி ரூபாவாக குறைக்கப்படல் வேண்டும். இதனூடாக எஞ்சியுள்ள 2,982 கோடி ரூபாவை சுகாதாரம், கல்வி போன்ற முக்கிய துறைகளுக்காகவும் அரசதுறை சார்ந்தவர்களுக்கு நிவாரணமாகவும் பெற்றுக் கொடுக்கலாம்.

6. இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு ஏதுவாக தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைப்பதற்கென நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படல் வேண்டும். தீர்வுத்திட்டம் முன்வைப்பது அரசின் கடமை என்பதால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் உரிய சிபாரிசுகளை மூன்று மாதங்களுக்குள் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

7. கொலைகள், கொள்ளைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்த நீதித்துறை அமைச்சின் ஊடாக சட்டமும் ஒழுங்கும் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மக்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் பொறுப்புக் கூறக்கூடிய செயல்திறன் மிக்க நாடாளுமன்ற உறுப்பினர் நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டு குற்றங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மாவீரர் உரையின் எதிரொலி கொழும்பில் குண்டு வெடிப்புகள்

நவம்பர் 28ல் கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் 16 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 30 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். அமைச்சர் டக்ளஸ் மீண்டும் ஒருமுறை உயிர் தப்பினார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரன் மாவீரர் தின உரையை வழங்கி 24 மணி நேரத்தில் இலங்கையில் இடம்பெற்ற இரு வெவ்வேறு குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று உள"ளது. இவ்விரு தாக்குதல்களையும் விடுதலைப் புலிகளே மேற்கொண்டு உள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்து உள்ளது.

பொதுநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்திற்கு வெளியே போலியோ நோயினால் ஊனமுற்ற பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் தனது குண்டை வெடிக்க வைத்த போது ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர். காயமடைந்த அமைச்சர் டக்ளஸின் செயலாளர் மருத்தவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு உயிரிழந்தார். காயமடைந்த மற்ற இருவரும் பாதுகாப்பு அலுவலர் ஆவார்கள். அவர்களில் ஒருவரின் நிலை கவலையளிப்பதாக இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

டக்ளஸின் அலுவலகத்தில் குண்டு வெடிப்பு நிகழ்ந்து சிறிது நேரத்தில் இரண்டாவது குண்டுவெடிப்பு நுகேகொடவில் உள்ள புடவைக் கடையில் இடம்பெற்று உள்ளது. சந்தேகத்திற்கிடமான பார்சல் ஒன்றை அக் கடையின் பாதுகாவலர் திறக்க முயன்ற போது குண்டு வெடித்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



அமைச்சர் டக்ளஸ் மீது ஏற்கனவே பல முறை கொலை முயற்சிகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னரும் பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் அமைச்சரை கொல்ல முயன்ற போதும் அதிலிருந்து அவர் உயிர் தப்பியிருந்தார்.

2007 மாவீரர் தின உரையில் பலமான நிலையில் இருந்து கொண்டே பேச்சு வார்தைகளில் ஈடுபட முடியும் என்ற தொனியில் விடுதலைப் புலிகளின் தலைவர் தெரிவித்திருந்தார். தாங்கள் போராட்டத்தை தொடரப் போவதாகவும் அவர் தனது அரை மணிநேரம் நீடித்த உரையில் குறிப்பிட்டு இருந்தமை தெரிந்ததே.

மேலும் சர்வதேச சமூகம் தங்களை தனிமைப்படுத்தியதைச் சுட்டிக்காட்டிய வே பிரபாகரன் சர்வதேச சமூகத்தின் மீதும் குற்றம்சாட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது. இத் தாக்குதல்கள் சர்வதேச சமூகம் பற்றி தங்களுக்கு இனி எவ்வித அக்கறையும் இல்லை என்பதைத் தெரிவிப்பதாகவும் அமைந்து உள்ளது.

மாவீரர் தினத்தன்று இலங்கை விமானப்படையினர் நடத்திய வெவ்வேறு தாக்குதல்களில் புலிகளின் குரல் வானொலி உறுப்பினர்கள் பாடசாலை மாணவிகள் உட்பட 20 பேர் வரை கொல்லப்பட்டனர்.

இலங்கை மிக மோசமான யுத்தச் சூழலுக்குள் மிக வேகமாகச் சென்று கொண்டு உள்ளது. ஜனாதிபதி மகிந்தவின தும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரனினதும் நடவடிக்கைகள் இதனை உறுதிப்படுத்துவனவாகவே உள்ளது.

இச்சம்பவங்கள் தொடர்பாக HRW, வெளியிட்டுள்ள கண்டனத்தில் இலங்கை அரசும் விபுலிகளும் பொது மக்களை தாக்குவதாகக் குற்றம்சாட்டி உள்ளது.

"Both the Tigers and government forces are brazenly violating the laws of war by targeting civilians or failing to distinguish between civilians and combatants," Brad Adams, Asia director at Human Rights Watch.

# பாலியல் வல்லுறவு, கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட டாக்டர் தற்கொலை முயற்சி

வைத்திய சிகிச்சை பெறுவதற்காக வேண்டி நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்ற 23 வயது நிரம்பிய இளம் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திவிட்டு கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பெயரில் டாக்கடர் ஒருவர் கைது செய்யப்பட்டார். கடந்த 12.11.2007 அன்று நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி அந்த பெண்ணை ஆறாவது மாடியில் இருந்து கீழே தள்ளி கொலை செய்ததாக சந்தேகிக்கப்படுகிறது. நீர்கொழும்பு வைத்தியசாலையில் கடமைபுரிந்த டாக்டர் இந்திக சுதர்சன பாலகே (33) என்பவரே சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு நவம்பர் 27ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு உள்ளார். இதற்கான உத்தரவை நீர்கொழும்பு மேலதிக நீதவான் மகிந்த பிரபாத் ரணசிங்க பிறப்பித்திருந்தார்.

இதன்படி நீர்கொழும்பு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த டாக்டர் கடந்த 16ம் திகதி ற்கொலை செய்ய முயன்றுள்ளார். இப்போது இவர் ஆபத்தான நிலையில் இவர் நீர்கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## அண்ணாவின் வானொலி நிலையத்தை மீளப்பெற தம்பி கட்சி மாறல்

மேல்மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர் துமிந்த சில்வா அண்மையில் மகிந்த ராஜபக்சவின் அரசாங்கக் கட்சியுடன் இணைந்து கொண்டார். இது தொடர்பாக மேல் மாகாண எதிர்க் கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் அபேவர்தன கருத்துத் தெரிவிக்கையில் "அரசாங்கக் கட்சிக்கு மாறியுள்ள துமிங்க சில்வாவின் மூத்த சகோதரருக்கு சொந்தமான ஆசிய வானொலி சேவையினை (எ.பி.சி) அரசாங்கம் அண்மையில் தடைசெய்தது. அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட இத்தடை உத்தரவை நீக்கிக் கொள்வதற்காகவே மேல்மாகாண சபை உறுப்பினர் ஆளுங்கட்சிக்குத் தாவியுள்ளார்" என குறிப்பிட்டார்.

உண்மைகள் உறங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# a dream comes true



By:

Kirusanth Murugaiah (age 8)
Knolled Primary School
Tolworth - Surrey
(This is a creative story)

One day there lived a boy called Balan. He always dreams of being a professional basketballer but he does not know how to play. Balan tried and tried but he just cannot do it. Therefore, he gave up.

He was trying to find a new talent like football, maths or netball. However, he just cannot forget about basketball even though it is hard.

One day there was a basketball match against another school and Balan was picked for the match. Everyone laughed when Balan was picked because he is rubbish at basketball.

So he got back to school grounds where they practise basketball. He practised basketball 3'o'clock to seven 'o'clock. Then he went back to his home.

His mum yelled, "Why you are late?"

Balan replied, "I was practicing my basketball."

So mum said, "Go to sleep".

Balan had a good dream that, Genii came to him and said, "Your wish is my command."

So Balan answered, "I wish, I was good at basketball." Then the Genii disappeared like a rocket.

When morning comes, Balan said, "Today is the day that we have to win."

Balan arrived to school quickly and everybody was excited. Then the match began against the other school.

Everyone was nervous. Balan was nervous too. Then all of a sudden, some body pass the ball to him. Now Balan was so nervous. He closed his eyes and threw the ball. The ball went through the net. The score was one nil to his school. Everybody cheered in his school.

Then suddenly the other team scored in half time. Balan ran with the ball with some bounces. He threw near the net and it went through the net again.

Finally, the referee blew the whistle. His school won. Everybody cheered "hip hooray!"

However, the other school were sad. They lost. Balan said "nice try".

Today he reached his dream.

From the day, nobody make fun of Balan about how he plays basketball. Now he is a hero in his school team.

So we all should dream about our bright future.

# கூரை ஏறி கோழி பிடிக்க முடியாத கூட்டணியினர் வானம் ஏறி வைகுண்டம் போகினமாம்...........

ரி கொன்ஸ்ரன்ரைன்

1975களில் ஆரம்பமாகிய தமிழர் விடுதலைக் கூத்து அணியினரின் சந்தர்ப்பவாத அரசியல் 30 வருடங்கள் கழித்தும் ஆனந்தசங்கரி ஐயா என்ற வடிவத்தில் தொடர்ந்தும் வீறுநடை போடுகின்றது. இதில் ஒரேயொரு வித்தியாசம் தான் இருக்கின்றது. அன்றெல்லாம் கூட்டணியினர் ஆவேசப்பட்டால் சத்தியாக் கிரகம், உண்ணாவிரதம் என்று ஒருவேளை சோற்றை பணயம் வைத்தார்கள். ஆனால் இன்று ஒவ்வொரு முறையும் நீங்கள் வளர்த்த தம்பி பிரபாகரன் ஆவேசப்படும் போது தற்கொலைப் போராளி என்ற போர்வையில் ஒவ்வொரு இளம் உயிர் பறிபோகின்றது..

ஆனந்தசங்கரி ஐயாவின் கருத்தின்படி (பார்க்க றறற.வரடக.ழசப) ஒவ்வொரு தற்கொலைப் போராளியின் மரணத்திற்கும் பிரபாகரன் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும் என்ற கருத்தை நாம் ஏற்றுக் கொண்டால் இந்த பிரபாகரனின் தோற்றத்திற்கான பொறுப்பை கூட்டணியினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்பிரச்சனையை விஞ்ஞான பூர்வமாக அணுகினால் ஒவ்வொரு தற்கொலைப் போராளியின் சாவிற்கும் பிரபாகரனுக்கு எவ்வளவு தொடர்பு இருக்கின்றதோ அதே தொடர்பு தான் கூட்டணியினருக்கும் இருக்க வேண்டும்.

ஐயா, அன்று நீங்கள் முறைப்படி கல்விகற்று ஆசிரியராகி பின்னர் அதில் திருப்தியில்லாமல் மேலும் கல்வி கற்று சிறந்த சட்டத்தரணியாகி பின்னர் அதிலும் பூரண திருப்தியில்லாமல் இடதுசாரி டுளுளீ யுடன் இணைந்து அரசியல் நடத்தி பின்னர் அதிலும் விரக்தியடைந்து தமிழ் காங்கிரஸிற்கு வந்து பின் கூட்டணியுடன் இணைந்தீர்கள். உங்களுடைய அறிவையும் கல்வித் திறமையையும் பக்க பலமாக வைத்துக் கொண்டு கிளிநொச்சியில் ஆரம்பமாகிய தாங்கள் இப்போது ருநேுளுஊழு வரை சென்று உள்ளீரகள்.

ஆனால் தற்போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் வளரும் இளைஞர்களின் நிலை என்ன? பிரபாகரனும் புலிகளும் அழித்து ஒழிக்கப்பட்டால் எல்லா நிலமைகளும் சீராகிவிடுமா? இன்று சங்கரி ஐயாவும் டக்ளஸ் தேவானந்தா கூட கூட்டாக அரசியல் வேலைகள் செய்ய முடியாத நிலை. ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளின் அராஜகத்திற்கு எதிரான குரலாக விளங்கிய நமது கருணா அம்மானின் கதை யாவரும் அறிந்ததே.

தமிழ் மக்களுக்கு ஓர் பாரிய பிரச்சனை இருக்கின்றது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீரகள் என்று நினைக்கிறேன். இலங்கை சுதந்திரம் அடைந்தது தொடக்கம் தமிழர்களின் பிரச்சினையின் கர்த்தா ஸ்ரீலங்காவின் பௌத்த பேரினவாத ஆட்சிபீடமே. அதில் ஒரு மாற்றமும் இல்லை. பிரச்சனை எங்கே இருக்கின்றது என்றால்....

கூட்டணி, விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லது ஏக பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டு தமிழர்களின் அடிப்படை அரசியல் உரிமைப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முன்வந்த அனைவரும் ( நீஞீஇ "டுழுவுஇ வுநுடுழுஇ நீசுடுகுஇ நுனேடுகுஇ நுசுழுளு) தமது ஸ்தாபனத்தினதும் தமது தனிப்பட்ட அபிலாசைகளையும் முன்வைத்தார்களே தவிர தமிழர் பிரச்சனையை இதய சுத்தியாக திறந்த மனதுடன் அணுகவில்லை. இது தான் தமிழர்கள் இன்று எதிர் நோக்கும் முக்கிய பிரச்சனை.

அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற தாக்குதலில் பள்ளிக்கூட சிறார்கள் உட்பட 19 பேர் இறந்ததாக செய்திகள் வெளியாகின. ஆனந்தசங்கரி ஐயா அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று அடித்துக் கூறுகிறார். லண்டனில் அவருக்கு வரவேற்பளிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் லண்டன் கிளை தமிழ்ச்செல்வனின் உயிரிழப்பிற்கு இரங்கள் செய்தி வெளியிட்டது. ஆனால் ஆனந்தசங்கரி ஐயா கொழும்பில் விடுத்த அறிக்கையில் தமிழ்செல்வன் மீது போர்க்குற்றம் சுமத்தப்பட வேண்டும் என்கிறார். ஐயா பிரபாகரன் பற்றி ஆயிரத்தியெட்டுக் குற்றச்சாட்டு இருக்கிறது. ஆனால் கொல்லப்பட்டவர்களைத் தெரிவு செய்து அவர்கள் மீது போர்க் குற்றம் சுமத்தவதை உங்கள் லண்டன் கிளையே ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ் மக்கள் எப்படி ஏற்பார்கள்.

அதுமட்டும் அல்லாமல் ஆதாரபூர்வமாக நடத்தப்படுகின்ற அரசின் படுகொலைகளை ஐயா கண்டிக்கத் தவறுவது ஏன்? ஆனந்தசங்கரி ஐயா அடுத்த வருடம் வருகின்ற தனது 75 ஆவது பிறந்த தினத்தை மனதில் வைத்துக் கொண்டு அறிக்கைகள் விடலாம். ஆனால் நாங்கள் எல்லோரும் மண்டையைப் போட்ட பின்பும் இந்தப் பிரச்சனை தொடரத்தான் போகின்றது. விடுதலைப் புலிகளையும் பிரபாகரனின் கோரத்தனத்தையும் கண்டிக்கிறோம் எனக் கூறிக் கொண்டு தமிழ் மக்களின் பிரச்சனைகளை மூடிமறைப்பது எவ்வித பயனையும் அளிக்காது.

எங்களுக்கு எமது வாழ்க்கையை எமது விருப்பப்படி நடத்திச் செல்ல உரிமை இருக்கிறது. இன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் ஏனைய வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும் மக்களின் நிலமைகளை உங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். இன்று அம்மக்கள் புலிகளுடன் அல்லது அரசசார்பு அணியினருடன் அல்லது அரச சார்பு ஆயுதக் குழுக்களுடன் இணைந்து செயற்படுவது அவர்களின் வாழ்வியல் கட்டாயம். அது அவர்களின் தவறில்லை. அப்பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு வேறு வழியில்லை.

தற்கொலை செய்துகொண்ட இளைஞர்களின் படங்களை ஒவ்வொன்றாக எடுத்து அவர்களின் முகங்களை உற்றுப் பாருங்கள் ஒரு கணம். அந்த வயதில் உங்கள் நினைவுகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அவர்களுக்கு வேறு வழியில்லை. வெளிநாடுகளில் உறவுகளும் ஆதரவும் அல்லது நல்ல வசதியும் இருந்திருந்தால் அவர்களும் மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி இருப்பார்கள். ஓரளவு வசதி படைத்தவர்கள் மத்திய கிழக்கு நோக்கி வேலை தேடிச் சென்றிருப்பார்கள். சற்று வசதியானவர்கள் கொழும்பிற்கு வந்திருப்பார்கள். எதுவுமே இல்லாத இழப்பதற்கு தங்கள் உயிரைத் தவிர எதுவும் இல்லாத பெரும்பாலும் கிழக்கு, வன்னி மக்கள் போராளியாவதை அல்லது போராளி ஆக்கப்படுவதைத் தவிர என்ன வழி? இது அவர்களின் குற்றமா? அவர்கள் கொல்லப்படுவதை எப்படி நியாயப்படுத்தலாம்.

இராணுவத்தில் தங்கள் உயிர்களை இழந்து வரும் சிங்கள இளைஞர்களின் நிலையும் இதுவே என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

புலிகள் மீதான உங்களின் அதிருப்தி நியாயமானதாக இருந்தாலும் புலிகளை



எதிர்ப்பது தான் உங்களின் முழுநேர அரசியலாக இருந்தால் உங்களுக்கு அரசியலை விட காழ்ப்புணர்ச்சி தான் மேலோங்கி நிற்கிறது.

உங்கள் எல்லோரையும் இலங்கை அரசின் பக்கம் தள்ளிவிட்டது புலகளே. ஆனால் இதனையே எத்தனை வருடங்களுக்கு சொல்லிக் கொண்டிருப்பது. அரசாங்கத்துடன் உள்ள கூட்டணி, ஈபிஆர்எல்எவ், புளொட், ஈபிடிபி என்றுள்ள உங்களுக்கு ஏதாவது தமிழ் மக்களுக்கு தீர்வு காண வேண்டும் என்ற விடயத்திலாவது ஏதாவது கூட்டு வேலைத்திட்டம் உள்ளதா? இல்லையே. எங்களுக்குள் கொள்கை வேறுபாடு இருக்கு என்று சொல்லி காமடி கீமடி பண்ணிடாதீர்கள்.

முடிந்தால் இந்தக் கூட்டணி, ஈபிஆர்எல்எவ், புளொட், ஈபிடிபி ஆகிய தமிழ் குழுக்கள் செய்ய வேண்டியது, இன்றுள்ள யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து (புலிகளை விட்டுவிட்டு) தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வை, ஏன் நெடுங்கதை பேசுவான் அரசாங்கம் ஏற்படுத்திய சர்வ கட்சிக் குழுவின் தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்த அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு தென்னம்வட்டு வரைக்கும் ஏறியாச்சு தேங்காய் பிடுங்கிறதா இல்லை இறங்கி வாறதா என்ற கதையெல்லாம் வேலைக்காகது ஐயா!!!

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரை மக்களைத் தலைகுனிய வைக்கும் காரை நலன்புரிச் சங்கம்

லண்டன் காரைநலன்புரிச்சங்கத்தின் நிர்வாகக் கூட்டத்தில் ஒரு காரைநகர் பிரஜையை அவரது சாதிப் பெயரை குறிப்பிட்டு கேவலப்படுத்தியது இன்று ஒரு முக்கிய விடயமாகியுள்ளது.

இந்த சாதியப் பிரச்சினையானது எமது தேசவிடுதலைப் போராட்டத்தின் அடிப்படைக் காரணங்களில் ஒன்று என்பது முக்கியமானது, ஆயுதப்போராட்ட காலத்திற்கு முன்பு இச்சாதியப் போராட்டம் அன்றைய காலகட்டத்தில் வெளிவந்த பத்திரிகைகளாலும் பொது அமைப்புக்களாலும் முன்னெடுக்கப்படாமல் மறைக்கப்பட்டு இருந்தது. சோஷலிஸ, மார்க்ஸீய அமைப்புக்களால் மட்டுமே இவை கருத்தில் கொள்ளப்பட்டும் இதில் தேவைப்படும் மாற்றங்கள் பற்றியும் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆயுதப் போராட்ட காலங்களில் இருந்து இன்று வரை உரிய முறையில் சமூக மாற்றத்திற்கு ஏற்றவாறு எந்தவொரு அமைப்பினாலும் இந்தப்பிரச்சினைகள் முறையாக கையாளப்படவில்லை என்பதும் முக்கியமானதாகும்.

வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்கள் தம்முடன் "தலித்துக்களை மிக கெட்டித்தனமாக எப்படி கையாள்வது" என்ற கொள்கையையும் எடுத்து வந்து இங்கும் அதை மிக கச்சிதமாக செயற்படுத்துகிறார்கள், இப்படியான மனம் படைத்தவர்களால் உருவான சங்கங்களில் ஒன்று லண்டன் காரை நலன்புரிச் சங்கம் எனலாம்.

இந்த காரைநலன்புரிச் சங்கம் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக லண்டனில் சில முற்போக்கு சிந்தனை கொண்டவர்களால் காரைநகர் மக்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது, காலப் போக்கில் இந்த அமைப்பின் நிர்வாக சீர்கேட்டினாலும், ஒருசில (குடும்பதினரின்)ரின் ஆதிக்கத் தன்மையாலும் ஆக்கிரமிப்பினாலும் இவ்வமைப்பில் இருந்த முற்போக்கு வாதிகள் ஒரங்கட்டப்பட்டனர் மற்றும் சிலர் தாமே ஒதுங்கிக் கொண்டனர்.

அன்றிலிருந்து இன்று வரை காரியதரிசியாக உள்ள சபாரத்தினம் இச்சங்கத்தை தனது குடும்ப சங்கமாக - தமது புதுறோட்டு சங்கமாக - தனது சொற்பணிந்து நடக்கக் கூடிய உறவினர்களையும் ஊர் அயலவர்களையும் கொண்ட ஒரு நாட்டாண்மை சங்கமாக நிலைநிறுத்தினார். இதற்கு உறுதுணையாக இருக்கும் ஜானானந்தனையும் தொடர்ச்சியாக பொருளாளராக வைத்துக் கொண்டார் , அத்துடன் தனது மாமனார் தியாகராசாவின் பெரையும் அவ்வப்போது பாவித்தும் செயற்ப்பட்டார் இந்த சங்கத்தினுடாக அனைத்து காரைநகர் மக்களையும் முழுக்குத்தகைக்கு எடுத்துக் கொண்டது போல் செயற்படுகிறார்.

இந்த சங்கத்தில் உறுப்பினராக உள்ளவர்களும், உறுப்பினர் அல்லாத ஊரவர்களும் விமர்சனங்களை முன் வைக்கும் போது சபாரத்தினமும் இவரது சண்டியர்களும் சீறியெழுந்து இவையெல்லாம் தம்மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளாக்கி பயந்து, ஆவேசப்பட்டு இந்த விமர்சனங்களை வைப்பவர்களை தனது அடியாட்களை வைத்து பயமுறுத்தியும் உள்ளனர். அன்றிலிருந்து இன்றுவரை இச்சங்ச நிர்வாக சீர்கேட்டை விமர்சனம் செய்யும் உறுப்பினர்கள் அமைப்பின் பெயரால் வெளியேற்றப்பட்டனர்.

இந்த அமைப்பின் செயற்பாடுகளும் அமைப்பில் உள்ளவர்களின் செயற்பாடுகளும் காரைநகரில் முன்பு பாராளுமன்ற உறுப்பினராகவும் பாடசாலை அதிபராகவும் இருந்த சபாரத்தினத்தின் மாமனார் தியாகராசா, எவ்வாறு பொதுக் கூட்டங்களில், பொது இடங்களில் கொதித்தெழுந்து சண்டைக்கு போகும் குணாதிசயங்களுடன் ஒப்பிடக்கூடியதாக இருக்கின்றது, இப்படியான நடத்தை கொண்டவர்கள் உள்ள சங்கம் சாதியை குறிப்பிட்டு பேசியது எதிர்பார்க்கக் கூடியதே!!

கடந்தகால போராட்ட அனுபவம் மக்களை பல வழிகளில், குலைத்து, சாதிய அடையாளங்கள் பலவற்றை அழித்து, ஒரு மாறிய சமூக அடையாளத்தை ஏற்படுத்த முயன்று நிற்கும் இக்காலகட்டத்தில், அந்த போராட்ட அனுபவத்தின் ஊடாக வளர்ந்த, அந்த நிலத்திலேயே, அந்த போராட்ட சுமைகளை சுமந்து இந்த மாற்றங்களை உட்கொள்ள முயன்று கொண்டிருக்கும் மக்களில் ஒருவனாக இருக்கும் ஒருவனை அவனது சாதியப் பெயரால் காரை நலன்புரிச்சங்க உபதலைவர் கோணேசலிங்கம் பேசியது மன்னிக்க முடியாதது.

அதைவிட கோணேசலிங்கம் குறிப்பிட்டு பேசிய அந்த நபர் கடந்ந 30 வருடங்களாக காரைநகர் மக்களுக்கு தனது சேவையினை செய்து வருபவரும், சமூகத்தில் ஒரு முற்போக்கு வாதியுமாவார், இப்படிப்பட்ட ஒருவருக்கு பிற்போக்குத்தனம் கொண்ட அமைப்பும் தனிநபர்களும் கொடுத்த மரியாதை மன்னிக்க முடியாததாகும்.

இப்படியான மனமுதிர்ச்சி பெறாத ஒரு சில காரைநலன்புரிச்சங்க உறுப்பினர்களின் நடத்தைகள் அனைத்து காரைநகர் மக்களையும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இயங்கும் அனைத்து காரைநகர் அமைப்புகளையும், வெட்கித் தலைகுனியும் நிலைக்கு தள்ளியுள்ளது.

இந்த காரை நலன்புரிச் சங்கம் தனது சீர்கேடுகளை திருத்தி தன்னை காரைநகர் மக்களுக்கான சங்கமாக - எல்லா மக்களும் சாதி வேறுபாடின்றி சமபங்கேற்கும் அமைப்பாக மாற்றிக் கொள்ள வேண்டும் இதற்கு ஆரம்ப நடவடிக்கையாக சாதியை குறிப்பிட்டு பேசப்பட்ட நபரிடம் இச்சங்கம் எழுத்து மூலம் மன்னிப்புக் கோர வேண்டும், இதைவிடுத்து பாலாவோடை அம்மன் கோவில் தேரை தாமே எரித்துவிட்டு "தலித்துக்கள் தான் தேரை எரித்தார்கள் என்று குற்றம்சாட்டி" அவர்களை பழிவாங்கியது போல் நடக்க முற்படக் கூடாது என கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கண்ட இந்த விடயங்கள் எனது குடும்ப அனுபவத்தில் இருந்தும் லண்டனில் வாழ்ந்த எனது அவதானங்களில் இருந்தும் எழுதப்பட்டுள்ளது. (எனது எழுத்துக்கள் தொடரும்)

முகுந்தன் (காரைநகர்)

## யுத்தம் தொடரும்! தொடர்ந்து போராடுவோம்!!

### 2007 மாவீரர்தின உரையின் சுருக்கமான சாரம்சம்

சிங்கள தேசத்தை நம்பமுடியாது என்பது உறுதியாகிவிட்டது. இனஅழிப்பைத் தொடரும் சிங்கள அரசுக்கு இராணுவப் பொருளாதார உதவிகள் வழங்குவதை அடியோடு நிறுத்தி சர்வதேசச் சமூகம் எமது மக்களின் சுயநிர்ணய உரிமையையும் இறையாண்மையையும் ஏற்று அங்கீகரிக்க வேண்டும். அறிவுவளம், செயல்வளம், பொருள்வளம், பணவளம் என உங்களிடம் நிறைந்து கிடக்கும் அனைத்து வளங்களையும் ஒன்று திரட்டி எமது விடுதலைப் போராட்டத்துக்கு நீங்கள் தாருங்கள். எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம்.

### 2007 மாவீரர்தின உரையின் விரிவான சாரம்சம்

சிங்களத் தேசம் அமைதி முயற்சிகளுக்கு ஆப்பு வைத்துவிட்டு அடக்கு முறையாலும் ஆயுதப் பலத்தாலும் தமிழரின் தேசியப் பிரச்சனைக்கு தீர்வு காணவே அது விரும்புகின்றது. எமது பிராந்தியத்திலே உலகப் பெரு வல்லரசுகளின் இராணுவப் பொருளாதார கேந்திர நலன்கள் புதைந்து கிடப்பதை அறிவோம். அந்த நலன்களை முன்னெடுக்க உலக வல்லரசுகள் முயற்சிப்பதையும் விளங்கிக் கொள்கிறோம். இதற்கு இலங்கைத் தீவில் நெருக்கடி நிலை நீங்கி



சமாதானமும் நிலையான நல்லாட்சியும் தோன்ற அனைத்துலக நாடுகள் ஆர்வமும் அக்கறையும் காட்டுவதையும் நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

அன்று இந்தியா தனது தெற்கு நோக்கிய வல்லாதிக்க விரிவாக்கமாக எமது தேசியப் பிரச்சனையிலே தலையீடு செய்தது. தமிழரது சம்மதமோ ஒப்புதலோ இன்றி சிங்கள அரசுடன் கூட்டுச் சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்தது. தீர்வு என்ற பெயரில் எலும்புத்துண்டு போன்ற ஒரு அரைகுறைத் தீர்வை இந்தியா அன்று எம்மக்கள் மீது கட்டிவிட முயற்சித்தது.

அன்று இந்தியா இழைத்த தவறை இன்று சர்வதேசமும் இழைத்து நிற்கிறது. ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்னவென்றால் ஒரு காலத்தில் எம்மைப் போன்று தமது சுதந்திரத்திற்காகப் போராடிய தேசங்களும் எம்மை பயங்கரவாதிகளாக பட்டம் சூட்டியமை தான்.

புலம் பெயர்ந்து எம்மக்கள் தாம் வாழும் நாடுகளில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் தமிழன உணர்வாளர்களையும் கைது செய்து சிறைகளிலே அடைத்து அவமானப்படுத்தி இருக்கின்றன.

சர்வதேச நாடுகள் வழங்கிவரும் தாராளப் பொருளாதார இராணுவ உதவிகளும் இரகசியமான இராஜதந்திர முண்டு கொடுப்புக்களும் சிங்கள இனவாத அரசை மேலும் மேலும் இராணுவப் பாதையிலேயே தள்ளிவிட்டிருக்கின்றன.

எமது விடுதலை இயக்கத்தையும் எமது விடுதலைப் போராட்டத்தையும் சிங்களத் தேசம் எப்போதும் குறைத்தே மதிப்பீடு செய்கிறது. கிழக்கில் எமது போர்த் திட்டங்களை வகுத்தோம். தற்காப்புத் தாக்குதல்களை நடத்தியவாறு தந்திரோபாயமாகப் பின்வாங்கினோம்.

வரலாற்றிலே முதற் தடவையாக எமது கரும்புலி அணியினரும் வான் புலிகளும் கூட்டாக நடாத்திய எல்லாளன் நடவடிக்கை சிங்கள இராணுவப் பூதத்தின் உச்சந் தலையிலே ஆப்பாக இறங்கி இருக்கின்றது. இந்த மண்டை அடி சிங்களம் கட்டிய கற்பனைகள், கண்டு வந்த கனவுகள் அத்தனையையும் அடியோடு கலைத்திருக்கிறது.

சமாதானத்திற்காக உழைத்த எமது தவப்புதல்வன் தமிழ்ச்செல்வனைச் சர்வசேதம் சமாதானம் பேசியே

ம் பக் தொடர்ச்சி

சாகடித்திருக்கிறது. சமாதானத்தின் காவலர்களாக வீற்றிருக்கும் இணைத் தலைமை நாடுகளும் இந்தப் பெரும் பொறுப்பில் இருந்து தவறியிருக்கின்றன.

இன அழிப்பைத் தொடரும் சிங்கள அரசிற்கு இராணுவப் பொருளாதார உதவிகள் வழங்குவதை அடியோடு நிறுத்தி சர்வதேசச் சமூகம் எமது சுயநிர்ணய உரிமையையும் இறையாண்மையையும் ஏற்று அங்கீகரிக்கும் என எமது மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றன. பூமிப்பந்தெங்கும் 80 மில்லியன் தமிழர் பரந்து வாழ்ந்த போதும் எமக்கென ஒரு நாடு இல்லாதமை தான் இந்தப் பரிதாப நிலைக்கு இந்த மோசமான நிலைக்கு காரணம்.

உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவரையும் தமிழீழ விடுதலைக்காக உணர்வெழுச்சியுடன் கிளர்ந்து எழுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

அறிவுவளம், செயல்வளம், பொருள் வளம், பணவளம் என உங்களிடம் நிறைந்து கிடக்கும் அனைத்து வளங்களையும் ஒன்றுதிரட்டி வருங்காலத்திலும் நிறைந்த பங்களிப்பை வழங்குமாறு அன்போடும் உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன்.

எத்தனை துயர்வரினும் எத்தனை இடர்வரினும் நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம்.

புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்

(வே.பிரபாகரன்)

தலைவர் தமிழீழ விடுதலைப் பலிகள்.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வெளிவிவகாரச் செயலருடன் நேர்காணல்



~ த ஜெயபாலன் ~

ல.குரல்: புலிகளின் சமாதானச் செயலர் தமிழ்ச்செல்வன் இலங்கைப் படைகளால் திட்டமிட்டு தாக்கப்பட்டாரா? இத்தாக்குதலுக்கான புலனாய்வுத் தகவல் வெளிநாடு ஒன்றின் உதவியுடன் பெறப்பட்டதா?

கோகன்ன: தமிழ்ச்செல்வன் in the right spot at the wrong time, இது சம்பந்தமாக எந்த இரகசியத் தகவல் வந்திருந்தாலும் அது தமிழ் சமூகத்திடம் இருந்து அப்பகுதியிலிருந்தே வந்துள்ளது. வெளியில் இருந்து அல்ல. உண்மையில் இராணுவத்துக்கு அப்பகுதியில் உள்ள மக்களால் நம்பகரமான தகவல்கள் வழங்கப்படுகிறது.

ல.குரல்: APRC Proposal எந்த நிலையில் உள்ளது? ஏன் அது தாமதமாகிறது? எப்போது அது வெளியிடப்படும்?

கோகன்ன: APRC Proposal, ஒரு முன்னேற்றமான நிலைக்கு வந்தள்ளது. பெரும்பாலும் இவ்வாண்டு முடிவிற்குள் அது மக்கள் முன் வைக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன். அரசாங்கம் பல கட்சிகளின் கூட்டாக உள்ளது. இவர்கள் எல்லோரையும் ஒரு பொது இலக்கு நோக்கி கொண்டுவருவது அவ்வளவு இலகுவானதல்ல. ஜனநாயகத்தின் தன்மை அப்படி.

ல.குரல்: அரசாங்கம் ஒற்றையாட்சி அடிப்படையிலான தீர்வுத் திட்டம் ஒன்றிற்கே அழுத்தம் கொடுக்கிறதா?

கோகன்ன: தீர்வுத் திட்டத்திற்கு முத்திரைகளைக் குத்த விரும்பவில்லை. ஒற்றையாட்சி எனக் குறிப்பிடுவது ஒரு அரசு என்பதே அல்லாமல் வேறெதுவும் இல்லை. பல ஒற்றையாட்சி நாடுகளில் அதிகாரம் பகிரப்பட்டு உள்ளது. ஒற்றையாட்சி என்றெல்லாம் முத்திரை குத்துவது அநாவசியம்.

ல.குரல்: அமைச்சர் டக்ளஸ் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு ஆதரவு கோரிவருகிறார். அரசு பின்கதவால் இத்தீர்வுத் திட்டத்தை கொண்டுவர உள்ளதா?

கோகன்ன: பல்வேறு தீர்வுத் திட்டங்கள் பற்றி ஆராயப்படுகிறது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடைய தீர்வுத் திட்டமும் ஒன்று. பின்கதவால் கொண்டுவரும் வேலைகள் எதுவும் இல்லை.

ல.குரல்: அரசு இராணுவத் தீர்வு ஒன்றிற்கு அழுத்தம் கொடுப்பதாகவே தெரிகிறதே?

கோகன்ன: அரச படைகள் யுத்தத்தில் வெற்றி பெறுவதால் நாங்கள் இராணுவத் தீர்வுக்குச் செல்கிறோம் என்று அர்த்தமல்ல. இந்தப் பாடத்தை நாங்கள் உலகின் பல பாகங்களில் இருந்தும் கற்றுள்ளோம். பிரச்சினைக்கான காரணத்தை அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக அணுகுவது மிக முக்கியமானது. காட்டிற்குள் விடுதலைப் புலிகளால் வெற்றிபெற முடியாது என்பதை அவர்களுக்கு தெரிவிக்கவே இராணுவம் உள்ளது.

கடந்த சில மாதங்களாக என்ன நடந்தது என்பதை புலிகள் உணர வேண்டும். போர்க் களத்தில் அவர்களுக்கு வெற்றியில்லை. வெளிநாடுகளில் அமெரிக்கா, லண்டன், பரிஸில் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். அமெரிக்காவில் ரிஆர்ஓ வின் நிதி முடக்கப்பட்டு உள்ளது. அது பல மில்லியன் என மதிப்பிடப்படுகிறது. இது புலிகளுக்கு தெளிவான ஒரு செய்தியை வழங்குகிறது. சர்வதேசரீதியில் அவர்களுக்கு இனி மதிப்பில்லை என்பதே அது.



ல.குரல்: அரசாங்கம் இந்த யுத்தத்தை ஆரம்பித்தது முதல் மனித உரிமை மீறல்கள் மோசமாக அதிகரித்து உள்ளது. இதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கையை எடுத்து உள்ளது?

கோகன்ன: புள்ளி விபரங்களையும் அறிக்கைகளையும் பார்த்தால் மனித உரிமை மீறல்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் குறைந்துள்ளதை அவதானிக்கலாம். ICRC இன் அறிக்கை இதனை உறுதிப்படுத்தி உள்ளது. அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பலன் தருகின்றது பலன் தர ஆரம்பித்து உள்ளது.

ல.குரல்: மனித உரிமைமீறல்கள் வீழ்ச்சி அடைந்ததற்கு கருணா நாட்டில் இல்லாததும் காரணம் எனக் கொள்ளலாமா?

கோகன்ன: கருணா இல்லாதது ஒரு காரணம் அத்துடன் அரசாங்கம் கடத்தல், பயமுறுத்தல்கள், பணப் பறிப்புகளுடன் சம்பந்தப்பட்டவர்களை இராணுவத்தினர், விமானப்படையினரைக் கூட கைது செய்துள்ளது. இதற்கு ஒருவரை மட்டும் அனைத்துக்கும் காரணமாகக் கொள்ள முடியாது.

ல.குரல்: சர்வதேச சமூகம் மனிதபரிமைகளைக் கண்காணிக்க உதவி வழங்கத் தயாராக உள்ளது. அரசாங்கம் அதனை ஏன் ஏற்கக் கூடாது?

கோகன்ன: ஏன் நாட்டிற்கு வெளியே உள்ள அமைப்பு ஒன்று வந்து எங்களுக்கு மனிதஉரிமைகள் பற்றி போதிக்க வேண்டும். உலகின் பல்வேறு நாடுகளில் மனிதஉரிமை மீறல்கள் இடம்பெறுகின்றது. எங்களுடைய பிரச்சினையை நாங்களே பார்க்க வேண்டும். எங்களால் முடியும் எங்களுக்கு வெளி அமைப்பு ஒன்று தேவையில்லை.

ல.குரல்: நோர்வே ஏதாவது புதிய பேச்சு வார்த்தை முயற்சிகளில் ஈடுபடுகிறதா? யுத்த நிறுத்தம் ஏதும் ஏற்பட வாய்ப்புண்டா?

கோகன்ன: தற்போது நோர்வே எந்த பேச்சுவார்த்தை நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. புலிகள் உண்மையிலேயே பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதாக இருந்தாலேயே யுத்த நிறுத்தம் சாத்தியம். புலிகளுடன் எங்களுடைய கடந்தகால அனுபவம் மோசமானது.

நாங்கள் இந்த கசப்பான அனுபவத்தை கற்றிருக்கிறோம். இதனால் பல உயிர்களை இழந்திருக்கிறோம் பொருளாதார நட்டத்தை சந்தித்து உள்ளோம். புலிகளை நாங்கள் நம்புவதாக இருந்தால் புலிகள் சகல கொலைகளையும் சகல இராணுவத் தாக்குதல்களையும் நிறுத்த வேண்டும்.

ல.குரல்: இவ்வருடம் பிரபாகரன் மாவீரர் தின உரையில் என்ன சொல்வார் என எதிர் பார்க்கிறீர்கள்?

கோகன்ன: பிரபாகரனின் உரைக்கு நான் என்றுமே அக்கறை செலுத்தியவன் அல்ல.

ல.குரல்: மாவீரர் தின உரையில் பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு அழைப்புவிடுத்தால்?

கோகன்ன: மாவீரர் தின உரையில் பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம். அவர் நடைமுறையில் அதனைக் காட்ட வேண்டும். தங்கள் கனரக ஆயுதங்களையும் அவர்களின் படை வீரர்களையும் புலிகள் ஓய்வில் வைக்க வேண்டும்.

ல.குரல்: புலிகள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று சொல்கிறீர்களா?

கோகன்ன: உலகின் பல பாகங்களில் இது வெவ்வேறு வகைகளில் செய்யப்பட்டு உள்ளது. நேபாளில் மாஓஇஸ்ட்டுக்கள் ஆயுதங்களை மத்திய வைப்பிலிட்டனர். வட அயர்லாந்தில் ஐஆர்ஏ படிப்படியாக ஆயுதங்களைக் களைந்தது. நாங்கள் கேட்பது புலிகள் நேர்மையுடன் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டும்.

ல.குரல்: தமிழர்களுக்கு தனித்துவமான பிரச்சினைகள் இருக்கிறது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

கோகன்ன: நான் தமிழர்களுடனேயே வளர்ந்தனான். வாழ்ந்தனான். தமிழர்களுக்கு உண்மையான பிரச்சினைகள் இருக்கின்றது. ஆனால் நாங்கள் ஒரு வறிய அபிவிருத்தி அடைந்துவரும் நாடு. தமிழர்களுடைய முழுப் பிரச்சினையையும் நாங்கள் எடுத்துள்ளோம் என்று சொல்லிவிடமுடியாது. நான் ஏற்றுக்கொள்ளிறோன். அதற்கான சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்.

லண்டனில் பெரும்தொகையான தமிழர்கள் வாழ்கிறார்கள். இலங்கையில் உள்ள பிரச்சினைகள் அவர்களுக்கு இங்கு இல்லையா? இது ஒரு செல்வந்த நாடு. இலங்கையிலும் பார்க்க லண்டனில் பிரச்சினைகளை வினைத்திறனுடன் கையாள முடியும். கையாளப்பட்டதா? இலங்கையில் இப்பிரச்சிகைகள் வினைத்திறனுடன் கையாளப்படும் என்று நம்புவோம்.

ல.குரல்: தமிழ் உத்தியோகபூர்வ மொழியாக இருந்த போதும் நடைமுறையில் அப்படியல்ல. ?

கோகன்ன: அதனை நடைமுறைப்படுத்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பொலிஸ் நிலையங்களில் தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரியை நியமிக்கின்றோம். ஒவ்வொரு அரச அலுவலகங்களிலும் குறைந்தபட்சம் தமிழ் பேசும் ஒரு அதிகாரியை ஆவது நியமிக்கின்றோம். ஆண்டாண்டு காலமாக இருந்து வந்த உதாசீனப்படுத்தல் ஓரிரு ஆண்டுகளில் மறைந்துவிடாது. கூடிய வளங்களை ஒதுக்க வேண்டும். அரச அலுவலர்களுக்கு தமிழைக் கற்பிக்கிறோம். அரச வேலைகளுக்கு தமிழ் பேசுவோரைச் சேர்க்கிறோம். முயற்சிகள் எடுக்கப்படுகிறது. நாங்கள் உண்மையான மனித நிலையை பார்க்கிறோம்.

ல.குரல்: கிழக்கில் ஒரு சிங்களப் பிரதேசத்தை உருவாக்கி அதனை தெற்குடன் இணைக்க அரசு திட்டமிடுகிறதா?

கோகன்ன: இது மிகவும் அபத்தமான குற்றச்சாட்டு. கிழக்கின் ஒரு பகுதியை தெற்குடன் இணைக்க அரசு திட்டமிடுகிறது என்று சொல்வது எனக்கு புதிய செய்தியாகவே உள்ளது.

ல.குரல்: கருணா விடயம் பற்றி பத்திரிகைகள் பல விடயங்களை அம்பலப்படுத்தி உள்ளனவே. நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

கோகன்ன: அடிப்படையில்லாத ஊகங்கள் பல உள்ளது. கேணல் கருணா பிரித்தானியாவுக்கு வந்து இருக்கிறார். அவர் பிரித்தானிய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டு உள்ளார். அவர் அரசியல் தஞ்சம் கேட்டதாகவும் எனக்குச் சொல்லப்பட்டது. அவர் ஒரு சட்டச் செயன்முறைக்கூடாக செல்ல வேண்டி

(8ம் பக்கம் பார்க்க)

உண்மைகள் உறங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6ம் பக்கத் தொடர்ச்சி

# டொக்டர் பலித கோகன்ணவுடன் நேர்காணல்

உள்ளது. அந்த சட்டச்செயன்முறையின் கையில் நான் அவரை விட்டுவிடுகிறேன்.

ல.குரல்: இந்த அம்பலப்படுத்தலையிட்டு அரசாங்கம் வெட்கப்படவில்லையா?

கோகன்ன: ஏன் ? அரசாங்கம் வெட்கப்பட வேண்டும். இவையெல்லாம் அம்பலமான விடயங்கள் அல்ல குற்றச்சாட்டுகளே. கே பி யைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டோம். அவரிடம் 26 நாடுகளின் பாஸ்போட்டுகள் இருந்தது. அதற்காக ஒவ்வொரு நாடும் வெட்கப்பட வேண்டுமா ? எனக்குத் தெரியவில்லை.

ல.குரல்: கேணல் கருணா பல்வேறு மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு உள்ளார். அவரை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தவும் திட்டமிடப்படுகிறது. அவர் இப்போதும் இலங்கைப் பிரஜை என்ற வகையில் அரசின் நிலைப்பாடு என்ன?

கோகன்ன: இலங்கை சட்ட வரையறைகளால் கட்டுப்பட்ட ஒரு நாடு, குற்றச்சாட்டுகள் தகமையுடையதாக இருந்தால் அதனை நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டும் அப்படி இல்லாதவை வெறும் குற்றச்சாட்டுகளே, அதற்கு மேல் அவற்றால் செல்ல முடியாது. அவர் இலங்கையிலோ அல்லது வேறு எங்குமொ இக்குற்றச்சாட்டுகளுக்காக விசாரிக்கப்படுவதாக இருந்தால் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ல.குரல்: ஸ்கொட்லன்ட் யாட் போர் மற்றும் மனித விழுமியங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக கேணல் கருணா மீது விசாரணை மேற்கொண்டால் இலங்கை அரசு அதற்கு ஒத்துழைப்பு வழங்குமா?



கோகன்ன: இது ஒரு முக்கிய கேள்வி. ஊகங்களை வெளியிட விரும்பவில்லை.

ல.குரல்: நாம் எதனையும் ஊகமாகக் கேட்கவில்லை. HRW கேணல் கருணா மீது இவ்வாறான குற்றச்சாட்டுகளை வைத்துள்ளது?

கோகன்ன: அப்படியானால் HRW, தங்கள் முன்னாள் தலைவர் மீதும் குற்றச்சாட்டை வைக்க வேண்டும். (They might have to charge fomer boss also, if they did that.), அவர்கள் கேணல் கருணாவுடன் கோடு கீறிவிட முடியாது. அதற்கு அப்பாலும் செல்ல வேண்டும். அவர்கள் அவ்வளவு தூரம் செல்வார்களா?

ல.குரல்: புலம்பெயர்ந்த தமிழர்களிடம் என்ன கேட்க விரும்புகிறீர்கள்?

கோகன்ன: லண்டனிலும் நியோர்கிகிலும் ஜேர்சியிலும் சுகமாக வாழ்ந்துகொண்டு யாரோ ஒருவருடைய பிள்ளையை வன்னிக் காட்டில் மரணிக்க விடுவது எப்படி நியாயம். புலம்பெயர்ந்த தமிழர்கள் இலங்கை மக்கள் எல்லோரும் கௌரவத்துடனும் சமாதானத்துடனும் வாழும் உரிமை உடையவர்கள். புலம்பெயர்ந்த தமிழர்களே இவ்விடயத்தில் கூடுதலாக செய்ய முடியும் இவர்களே விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்குகிறார்கள். அவர்களைக் கொண்டாடுகிறார்கள். புலிகளை ஊக்குவிக்கிறார்கள். அவர்கள் இதனை நிறுத்த வேண்டும்.

இது டொக்டர் பலித கோகன்ண நவம்பர் 16ல் லண்டன் குரலுக்கு அளித்த நேர்காணல். இந்நேர்காணல் Hotel Mandarin Orientalல் இடம்பெற்றது.

# கொழும்பில் மீண்டும் கைதுகள்

மாவீரர் தினத்தைத் தொடர்ந்து கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளின் எதிர்த் தாக்கமாக கொழும்பில் உள்ள தமிழர்கள் பெரும் தொகையில் கைது செய்யப்பட்டு உள்ளனர். 2200 பேர் கைது செய்யப்பட்டு தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பித்த 1800 விடுவிக்கப்பட்டதாக பா உ ஜெயராஜ் பெர்னான்டோப் பிள்ளை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதனை டிசம்பர் 3ல் மறுத்து உள்ள சுயாதீன ஊடக இயக்கம் (Free Media Movement) தகுந்த ஆவணங்களை சமர்ப்பித்தவர்களும் தடுத்து வைக்கப்பட்டு உள்ளதாகவும் அவர்கள் கைது செய்யப்பட்ட முறையும் மோசமானது எனத் தெரிவித்து உள்ளது.

இலங்கையில் ஊடகங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் பற்றியும் சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம் தனது செய்திக்குறிப்பில் குறிப்பிட்டு உள்ளது. 2005 நவம்பர் முதல் ஊடகத்துறையில் பணியாற்றிய 11 பேர் கொல்லப்பட்டும் 5 பேர் கடத்தப்பட்டும் ( இருவர் விடுவிக்கப்பட்டனர்) உள்ளதாக அச்செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. இருந்தும் இவை தொடர்பாக இதுவரை எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை என்று குற்றம்சாட்டியுள்ள சுயாதீன ஊடக இயக்கம் இந்த பயங்கரத்தை நிகழ்த்திய யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவித்து உள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களின் வாழ்நிலை நாளாந்தம் மோசமடைந்தே செல்கிறது. வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களிலும் இலங்கையின் தென்பகுதிகளில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

இந்நிலையில் இலங்கை அரசின் இவ்வாறான நடவடிக்கைகள் இன முரண்பாட்டை மேலும் தூண்டுவதாகவே அமையும். ஏற்கனவே இவ்வாண்டு யூனில் கொழும்பில் உள்ள தமிழர்களை வடக்கு கிழக்கு தாயகப் பகுதிகளுக்கு பலவந்தமாக அனுப்பி வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பெரும் அழுத்தங்கள் ஏற்பட்டதாலும் சட்ட நடவடிக்கையாலும் அரசு அதனைக் கைவிட்டது தெரிந்ததே.


## விசேட தினங்கள்

கஜமுக சம்காரம்: 14 டிசம்பர் 2007 மாலை 5.50 மணிக்கு

ஐயப்ப மண்டல பூர்த்தி: 26 டிசம்பர் 2007 மாலை 5.30 மணிக்கு

**மாதாந்த காயத்திரி அம்மன் வழிபாடு**

காயத்திரி யாக வழிபாடு ஞாயிற்றுக் கிழமைகளில்

30 டிசம்பர் 2007

06 ஜனவரி 2008

03 பெப்ரவரி 2008

09 மார்ச் 2008

காலை 10 மணிக்கு விசேட அபிஷேகத்தைத்

தொடர்ந்து விசேட பூசை 108 காயத்திரி ஜப சமர்ப்பணம், திருவீதியுலா.

**மங்கள நிகழ்ச்சிகளுக்கு மேளம் நாதஸ்வரம் ஏற்பாடு செய்து தரப்படும்.**


**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org